# கிறிஸ்து பிறப்பின் அறிவிப்பு



# ANNUNCIATION
# MARCH 25

மார்ச் 25

## கிறிஸ்து பிறப்பின் அறிவிப்பு

இன்று திருச்சபையானது இரண்டு விழாக்களைக் கொண்டாடுகிறது. கன்னிமரியாள், வர இருந்த உலக இரட்சகரின் தாயாக வேண்டும் என்னும் சுப செய்திகளை அறிவிக்க கபிரியேல் அதிதூதர் வந்த விழா: புனித திரித்துவத்தின் இரண்டாம் ஆளாகிய சுதன் மரியாளின் உடலில் பரிசுத்த ஆவியின் வல்லமையால் மனித உடலும் மனித ஆன்மாவும் எடுத்த விழா. மரியாள் தேவ சித்தத்துக்குப் பணிந்தாள். உடனே இறைவன் மனுஷ அவதாரம் செய்தார். தாவீதின் குடும்பத்தைச் சேர்ந்த ஒரு கன்னிப்பெண் கடவுளின் மாதாவாகி விட்டாள். கடவுள். மரியாள் உலக இரட்சகரின்தாய். நமக்காக தம் இரத்தத்தை வடித்தவரின் தாய். இயேசு தம் பரம பிதாவையும் பரிசுத்த ஆவியையும் வந்தித்தார். அன்பு செய்தார். அடுத்தபடியாக தம் தாயை வந்தித்தார். அன்பு செய்தார். ஏசுவின் தாயை அன்பு செய்யாதவன் இயேசுவைக் கண்டு பாவிப்பதில்லை. கன்னிமரியாளா் மானிட சந்ததியின் மாதா. எனவே நாம் அளவை அன்பு செய்ய வேண்டும், வந்திக்க வேண்டும். பரிசுத்த ஆவியினால் சகல சிருஷ்டிகளுக்கும் மேலாக அர்ச்சிக்கப்பட்டவள் அவள். மனு உருவான தேவ சுதனின் தாயாக தேர்நதெடுக்கப்பட்ட அவள் நமக்கும் தாயாக தரப்பட்டாள்.

**சிந்தனை:**

ஒருமுறை தேவதாய் புனித ஜெர்த்துருத் அம்மாளுக்குத் தோன்றி “இதோ நான் ஆண்டவருடைய அடிமை என்று நான் சொன்ன போது அடைந்த மகிழ்ச்சியை பக்தியுடன் எனக்கு நினைவூட்டி என் உதவியைத் தேடும் அனைவருக்கும் நான் உண்மையாகவே தாயாக இருப்பேன். தவறாமல் அவர்களுக்கு உதவி செய்ய வருவேன்” என்றாள்.

**செபம்:**

பாவமில்லாமல் உற்பவித்த மரியாயே, இறைவனுடைய தாயாக நீர் இணங்கியதற்காக உமக்கு நன்றி சொல்கிறேன்.